பக்கங்கள்: ஆறு

PUBLIC LIBRARY
JAFFNA.

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 ஆவணி 28 வெள்ளிக்கிழமை (13-09-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 209

## வடக்கு - கிழக்கு சிவில் நிர்வாகம்:

# இணைப்புக் குழு நியமனம் குறித்து தமிழ்க் கட்சிகள் மத்தியில் அதிருப்தி!

## பயன் கிடையாது எனத் தெரிவிப்பு

கொழும்பு, செப்ரெம்பர் 13

வடக்கு – கிழக்கு மாகாண சிவில் நிர்வாகத்துக்குப் பொறுப்பாக ஜனாதிபதியால் நேற்று முன்தினம் அமைக்கப்பட்ட வடக்கு – கிழக்கு இணைப்புக் குழு குறித்து தமிழ்க் கட்சிகள் அதிருப்தி தெரிவித்துள்ளன.

நேற்று 5 தமிழ்க் கட்சிகளும் கொழும்பில் கூடி இது குறித்து விவாதித்ததாகவும் இந்த இணைப்புக் குழுவினால் எந்தவித பயனும் இல்லை என்ற கருத்தே எல்லாத் தமிழ்க் கட்சிகளிடையேயும் நிலவியதாகவும் புளொட் அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

திரு. சித்தார்த்தன் இது குறித்து கருத்துத் தெரிவிக்கையில் வடக்கு-கிழக்கு இணைப்புக் குழுவால் அதிக பலன் கிடைக்கும் என நான் கருதவில்லை. இந்தக் குழுவில் 150 பேருக்கு மேல் அங்கம் வகிக்க இருப்பதால் கருத்தொருமித்து இது செயற்படும் என்று நம்புவதற்கில்லை என்றார்.

இந்த இணைப்புக் குழுவில் 50 சதவீதமானோர் அரச ஊழியர்களே. அதாவது பிரதேச செயலர்கள். ஆகவே இவர்கள் மத்திய அரசின் அபிலாஷைகளுக்கு ஏற்பவே செயற்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் மீன்பிடிக்கதடை

கொழும்பு, செப். 13

மன்னார்ப் பகுதியில் கடந்த புதன்கிழமை முதல் மூன்று தினங்களுக்கு கடலில் மீன் பிடிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இத்தடை குறித்து பாதுகாப்பு அதிகாரிகள், மன்னார் செயலக அதிகாரிகள் மூலம் மீனவருக்கு அறிவிக்கப்பட்டது. (இ-3)

## படையினர் துண்டுப்பிரசுரம்

கொழும்பு செப். 13

விடுதலைப் புலிகளை சரண் அடையக்கோரும் துண்டுப் பிரசுரங்களை, பாதுகாப்புப் படையினர் தாண்டிக்குளம் சோதனை நிலைகள் ஊடாகச் செல்லும் பொதுமக்களிடம் விநியோகித்தனர் என்று கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது. (இ-3)

## குஜ்ரால் இலங்கை வருகிறார்

கொழும்பு, செப். 13

இந்தியாவின் வெளிவிவகார அமைச்சர் இந்திர குமார் குஜ்ரால் வருட இறுதியில் இலங்கை வருகிறார்.

இவர் இலங்கை - இந்திய ஆணைக்குழுக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காகவே இலங்கை வருகிறார் என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்தது. (இ-3)

## பாதுகாப்பு அரணுக்குள் புலிகள் ஊடுருவ முயற்சி

கொழும்பு, செப். 13

வவுனியா மாவட்டத்தில் உள்ள பூவரசங்குளத்தில் பாதுகாப்புப் படையினரின் முன்னணி பாதுகாப்பு நிலைக்குள் புலிகள் ஊடுருவ முயன்றனர் என்று பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

நேற்று அதிகாலை 2 மணி அளவில் இச்சம்பவம் இடம் பெற்றதாகவும் —

எனினும் படையினர் இந்த முயற்சியை முறியடித்து விட்டனர் என்றும் —

இந்தச் சம்பவத்தில் இரு புலிகள் கொல்லப்பட்டனர் என்றும் நடவடிக்கைத் தலைமையகம் மேலும் தெரிவித்தது. (இ-3)

## கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தலைவர் ராஜினாமா!

கொழும்பு, செப். 13

இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் உபாலி தர்மதாச நேற்று ராஜினாமாச் செய்தார்.

கடந்த வாரம் சிங்கர் கிண்ண இறுதிப் போட்டியின்போது இடம்பெற்ற தவறுக்குப் பொறுப்பேற்று அவர் ராஜினாமா செய்துள்ளார்.

சிங்கர் கிண்ண இறுதி வைபவத்தின்போது தாம் பிரதம

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அரசு அறிவித்துள்ள இணைப்புக்குழு இடைக்கால நிர்வாகசபை அல்ல

### புனர்வாழ்வு அமைச்சு விளக்கம்

கொழும்பு, செப். 13

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவினால் நேற்று முன்தினம் ஏற்படுத்தப்பட்ட வடக்கு — கிழக்கு இணைப்புக் குழுவுக்கும் இடைக்கால நிர்வாக சபைக்கும் எதுவிதத் தொடர்பும் இல்லை என்று துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து, புனர் வாழ்வு புனரமைப்பு அமைச்சு நேற்று விளக்கம் அளித்தது.

இடைக்கால நிர்வாக சபைக்குப் பதிலாகவே இந்த இணைப்புக் குழு நியமிக்கப்பட்டிருப்பதாகக் கருதுவது தவறானது என்றும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதற்கிடையில் இந்த இணைப்புக்குழுவின் செயலாளராக வடக்கு — கிழக்கு மாகாண ஆளுநர் காமினி பொன்சேகா நியமிக்கப்பட்டுள்ளார்.

திட்டமிடுதல், அமுல் படுத்தல் மற்றும் மத்திய, மாகாண அரசு மட்டங்களிலான அபிவிருத்தி நடவடிக்கைகளை முன் எடுத்துச் செல்வது ஆகியவையே இந்த இணைப்புக் குழுவின் பிரதான இலக்காகும் என்றும் —

இந்தக் குழு மாதம் ஒரு தடவை கூடி நிலைமைகளை ஆராய்ந்து நடவடிக்கைகளை எடுப்பதோடு, ஜனாதிபதிக்கும் தனது செயற்பாடுகள் குறித்து அறிக்கையைச் சமர்ப்பிக்கும் என்றும் —

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் அங்கம் வகிக்கும் சகல நாடாளுமன்ற உறுப்பினர்களும், வடக்கு - கிழக்கு மாகாண மாவட்ட செயலாளர்களும், வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சிச் சபைகளின் தலைவர்களும் பிரதேசசெயலர்களும் இக் குழுவின் அங்கத்தவர்களாக இருப்பார்கள் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ- 3)

## கிழக்கில் பயணிகள் பஸ்மீதுதாக்குதல்; 11 பேர் பலியாகினர்; 27 பேர் காயம்

### அறந்தலாவவில் நேற்றுக் காலை சம்பவம்

கொழும்பு, செப். 13

பொதுமக்கள் பயணம் செய்த பஸ் ஒன்று ஆயுதமுனையில் கடத்திச் செல்லப்பட்டு, அதில் இருந்த பயணிகள் மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்யப்பட்டதில் —

11 பேர் கொல்லப்பட்டனர் என்றும் 27 பேர் காயமடைந்தனர் என்றும் —

கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தத் தாக்குதலை விடுதலைப் புலிகளே நடத்தினார்கள் என்றும் பாதுகாப்புத்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

இச் சம்பவம் குறித்து இராணுவ வட்டாரங்கள் கூறியதாவது: -

கிழக்கு மாகாணத்தில் இருந்து நேற்றுக் காலை கண்டி நோக்கிச்சென்றுகொண்டிருந்த பயணிகள் பஸ் ஒன்று அம்பாறை மாவட்டம் அறந்தலாவவில் வைத்து ஆயுத முனையில் வழி மறிக்கப்பட்டு ஒதுக்குப்புறமான இடத்துக்குச் செல்லுமாறு உத்தரவிடப்பட்டது —

பஸ் ஒதுக்குப்புறமான இடத்தைச் சென்றடைந்ததும், பஸ்ஸில் இருந்தவர்கள் மீது கண்டபடி துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது —

இந்தச் சம்பவத்தில் 11 பேர் படுகொலை செய்யப்பட்டனர். 27 பேர் காயமடைந்தனர் —

கொலையுண்டவர்களில் மூன்று பெண்களும், இரண்டு சிறுவர்களும் அடங்குவர் —

(6 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். - திருமலை சேவைக்கு மேலும் இரு கப்பல்கள்

கொழும்பு, செப். 13

திருகோணமலையில் இருந்து யாழ்ப்பாணம் செல்வதற்கு மேலும் இரண்டு கப்பல்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

'நரோமா', 'நியூகோ கொண்டுரேஸ்' என்பனவே இந்த இரு கப்பல்களும் ஆகும். ஏற்கனவே ''தராகி'' என்ற கப்பல் இதற்காக அமர்த்தப்பட்டுள்ளது.

புதிதாக அமர்த்தப்பட்டுள்ள இரு கப்பல்களும் காலியில் இருந்து திருகோணமலைக்கு வந்து சேர்ந்துள்ளன.

திருகோணமலையில் இருந்து யாழ் செல்வதற்காக 410 பேர் வவுனியா ஊடாக திருகோணமலைக்கு வந்துள்ளனர். மேலும் 370 பேர் நேற்று முன்தினம் வவுனியாவில் இருந்து திருமலை வந்து சேர்ந்தனர்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மந்திகை ஆஸ்பத்திரியில் வைத்தியர் பற்றாக்குறை

வடமராட்சி, செப். 13

நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்க எம். பி. பி. எஸ். பட்டம் பெற்ற வைத்தியர்கள் எவரும் மந்திகை ஆஸ்பத்திரியில் இல்லை.

தற்போது இந்த வைத்திய சாலையில் கடமையாற்றும் மாவட்ட வைத்திய பொறுப்பதிகாரியும் மற்றொரு பெண் வைத்திய அதிகாரியுமே எம். பி. பி. எஸ். பட்டம் பெற்ற டாக்டர்கள் ஆவர்.

ஆனால் மாவட்ட வைத்தியப் பொறுப்பதிகாரிக்கு வைத்தியசாலையின் நிர்வாக அலுவல்களைக் கவனிக்கவே நேரம் போதுமானதாக இருக்கிறது.

அத்துடன் இவரே மன நோய் சிகிச்சை வைத்திய பிரிவுகளையும் கவனிக்கிறார்.

எம். பி. பி. எஸ். பட்டம் பெற்ற மற்றைய பெண் வைத்திய அதிகாரி, சாவகச்சேரி மாவட்ட அரசினர் வைத்திய சாலைக்குப் பொறுப்பதிகாரியாக (டி. எம். ஓ) இடமாற்ற உத்தரவு பெற்றுள்ளார். ஆகவே அவரும் அங்கு விரைவில் கடமையைப் பொறுப்பேற்க இருக்கிறார்.

மற்றும் ஆறு பேரில் ஒரு குழந்தை வைத்திய நிபுணரும் ஒரு மகப்பேற்று வைத்திய நிபுணரும் ஏ. எம். பி. மற்றும் ஆர். எம். பி. தரத்தில் உள்ள நான்கு உதவி வைத்தியர்களுமே கடமை ஆற்றுகின்றனர்.

யாழ். பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் அலுவலகத்தின் நிர்வாகத்தின் கீழ் உள்ள வைத்தியசாலைகளுக்குள் தரம் உயர்ந்ததும் முதன்மையானதுமான வைத்தியசாலையாக இருந்து வருவது இந்த வைத்தியசாலைதான்.

சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்னர் ஆதார வைத்திய சாலையாக தரம் உயர்த்தப்பட்டபோது, பல்வேறு வைத்திய நிபுணர்கள் அடங்கலாக 16 எம். பி. பி. எஸ். பட்டம் பெற்ற டாக்டர்களும் ஓர் உதவி வைத்தியரும் (ஆர். எம். பி.) இங்கு கடமையாற்றி வந்தனர்.

இந்த வைத்தியசாலையில் பணியாற்றிய டாக்டர்கள் படிப்படியாக இடமாற்றலாகிச் சென்றபோதும் அவ்வெற்றிடங்களுக்கு எவரும் நியமிக்கப்படவில்லை.

மாவட்ட வைத்திய பொறுப்பதிகாரியும் குழந்தை வைத்திய நிபுணரும் இளைப்பாறிய பின்னர் மீண்டும் சேவை செய்து வருபவர்களாவர்.

இந்த நிலையில் ஏ. எம். பி. மற்றும் ஆர். எம். பி. தரங்களில் உள்ள நான்கு உதவி வைத்தியர்களும் தான் வெளிநோயாளர் பிரிவிலும் இரவு நேரக் கடமையிலும், அவசர நோயாளர்களைப் பார்வையிடுவதிலும் கிளினிக்குகளில் சிகிச்சை அளிப்பதிலும் ஈடுபட்டுள்ளனர்.

இந்த வைத்தியசாலையின் தரத்துக்கேற்ப வைத்திய அதிகாரிகளை நியமிக்காமல் விட்டாலும் குறைந்த பட்சம் எம்.பி.பி எஸ் பட்டம் பெற்ற வைத்தியர்களையாவது நியமிக்க யாழ் பிராந்திய சுகாதாரத்திணைக்களம் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கோரப்படுகிறது

(இ-173)

## சுன்னாகம் மின் நிலைய இயந்திரங்கள் பயனற்றவை

### பிரிட்டிஷ் குழு அறிக்கை

யாழ்ப்பாணம், செப். 13

சுன்னாகம் மின் நிலையத்தில் உள்ள பாரிய ஜெனரேட்டர்களைத் திருத்தியமைக்கும் முயற்சி பயனற்றது என்று அந்த நிலையத்தைப் பார்வையிட்ட பிரிட்டிஷ் குழு தெரிவித்துள்ளது

யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த பிரிட்டிஷ் அரச அதிகாரிகள் குழு ஒன்று சுன்னாகம் மின் நிலையத்துக்கு விஜயம் செய்து அங்குள்ள நிலைமைகளைப் பார்வையிட்டிருந்தது.

அங்குள்ள மின் உற்பத்தி இயந்திரங்களைத் திருத்தத் தேவையான உதிரிப் பாகங்களைப் பெற்றுக் கொள்வது கஷ்டம் என்றும் —

பெரும் சிரமத்துடன் அதைத் திருத்தினாலும் அதனால் ஏற்படும் பலன் குறிப்பிடத்தக்க அளவாக இருக்காது என்றும் —

இதனால் அந்த இயந்திரங்களைத் திருத்தும்முயற்சியைக் கைவிடுமாறும் —

அக்குழு சமர்ப்பித்துள்ள அறிக்கையில் சிபார்சு செய்துள்ளது. (உ-3)

## தட்டுப்பாடு

தெல்லிப்பழை, மானிப்பாய் அரசினர் வைத்திய சாலைகளில் மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது.

இந்த வைத்தியசாலைகளில் சாதாரண பனடோல், பிறிற்ரோன் உட்பட பல முக்கியமான மருந்து வகைகள் முடிவடைந்து விட்டன.

இதேவேளை இந்த இரு வைத்தியசாலைகளிலும் இரத்த அழுத்தம் பார்க்கும் கருவிகள் இல்லாததனால் இருதய நோயாளிகள் பெரும் ஏமாற்றத்துடன் செல்கின்றனர். (இ-100)

## மார்பு நோய் ஆஸ்பத்திரி ஊழியருக்கு சம்பளமில்லை

தென்மராட்சி, செப். 13

மயிலிட்டி மார்பு நோய் வைத்தியசாலை ஊழியர்களுக்கு ஜூன், ஜூலை, ஓகஸ்ட் மாதங்களுக்குரிய சம்பளம் வழங்கப்படவில்லை.

இந்த ஊழியர்களுக்கான சம்பளம் கொழும்பிலிருந்து அனுப்பப்படுகின்ற போதிலும் தபால் போக்குவரத்து சீரில்லாததால் சம்பளம் வந்துசேரவில்லை.

யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் மாகாண பிரதிப் பணிப்பாளர் பணிமனையினால் மாதாந்தம் சம்பளத்தின் ஒரு பகுதி ஊழியர்களுக்கு வழங்கப்பட்டதாகவும்—

இக்கொடுப்பனவும் கடந்த மூன்று மாதங்களாக வழங்கப்படவில்லையெனவும் தெரிவிக்கப்படுகிறது—

(இ-117)

## ராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக்கு விதை நெல்

### வவுனியா அரச அதிபர் தகவல்

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் இராணுவக் கட்டுப்பாடற்ற வவுனியாப் பகுதிகள் ஆகியவற்றுக்கு 4 ஆயிரம் மெற்றிக்தொன் விதை நெல்லும், 2ஆயிரம் கிலோ விதை உழுந்தும் ஒதுக்கப்பட்டுள்ளன என்று வவுனியா அரச அதிபர் திரு கே. கணேஷ் தெரிவித்தார்.

95/96 காலபோகம் கடும் வரட்சியால் பாதிக்கப்பட்டதாலும்—

அந்த மாவட்டங்களில் வசிக்கும் மக்களுக்குரிய நிவாரணம் இற்றைவரை கிடைக்காததாலும்—

இவ்வாண்டு மழைபெய்யும் காலநிலை நிலவுவதாலும்—அங்குள்ள மக்கள் பல கஷ்டங்களின் மத்தியிலும் விவசாயத்தில் நாட்டம் கொண்டுள்ளனர் என்று மேலும் அரச அதிபர் தெரிவித்தார்.

அவர்களுக்கான விதைநெல், கிருமிநாசனி, உரம் ஆகியவற்றை விரைவாக அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (இ-3)

## நிர்வாக சேவை போட்டிப் பரீட்சை

கொழும்பு, செப். 13

இலங்கை நிர்வாக சேவைக்கு ஆட்களைச் சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சையின் இரண்டாம் பகுதி எதிர்வரும் 20 ஆம் திகதி முதல் அக்டோபர் 3 ஆம் திகதி வரை நடைபெறும்.

முதலாம் பகுதியின் ரத்துச் செய்யப்பட்ட கிரகித்தல் பரீட்சை எதிர்வரும் 29 ஆம் திகதி நடைபெறவிருப்பதாக பரீட்சை ஆணையாளர் தெரிவித்தார்.

கொழும்பில் 40 நிலையங்களில் இப்பரீட்சை நடைபெறும். (இ-3).

## அரிசி வாங்க அமெரிக்கா கடன் உதவி

மணிலா, செப். 13

சுமார் 28 ஆயிரம் தொன் அரிசியை இறக்குமதி செய்வதற்காக நூறு இலட்சம் டொலர்களை இலங்கைக்கு அமெரிக்கா கடனாக வழங்கியுள்ளது.

30 ஆண்டுகளில் இலங்கை அரசு இந்தக்கடனைத் திருப்பிக் கொடுக்கவேண்டும்.

[இ-3]

## முதலையினால் கடியுண்டார்

தென்மராட்சி, செப் 13

குளத்தில் மீன் பிடிக்கச் சென்றவர் முதலையினால் கடியுண்டு வலது கையை இழந்தசம்பவமொன்றுகடந்த மாதம் கிளிநொச்சி இரணமடுவில் இடம் பெற்றது.

ஊர்காவற்றுறையைச் சேர்ந்த க. சித்திரவேல் (வயது 30) என்பவரே முதலையினால் கடியுண்டு மல்லாவி ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டு, அங்கிருந்து வவுனியா ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டார். அங்கு அவரது வலது கை முழங்கையுடன் அகற்றப்பட்டது.

(இ-117)

## பெர்மிட் பெற்ற பலர் சிமெந்து பெறவில்லை

தென்மராட்சி, செப். 13—

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் சிமெந்து பெறுவதற்கு அனுமதிப்பத்திரம் (பெர்மிட்) பெற்ற பலர் இதுவரை தமக்கு ஒதுக்கப்பட்ட சிமெந்தைப் பெற்றுக்கொள்ளாததால் பெருமளவு சிமெந்து சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் தேங்கியுள்ளது.

(இ-117)


சுன்னாகம் பல நோ; கூ; சங்கம் (வ-து)
சுன்னாகம்

## அறிவித்தல்

### பொதுமுகாமையாளர் பதவி

குறி. இல. 101: 06

மேற்படி பதவிக்கு 12 - 08 - 96 ஆம் திகதி இப் பத்திரிகையில் விளம்பரம் செய்யப்பட்டது சார்பாக; விண்ணப்ப முடிவு காலம் 30 - 09 - 96 வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றோம்.

— தலைவர்

11-09-96 (சி/2878)



## மரண அறிவித்தல்கள்

### மேரிமாகிறேற் முத்தம்மா

(ஆசிரியை)

சில்லாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது பாண்டியன்தாழ்வை வதிவிடமாகக் கொண்டவருமாகிய மேரிமாகிறேற் முத்தம்மா 12-9-1996 அன்று காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை (சாம்பிள்மாஸ்டர்) அவர்களின்மனைவியும், சிறிகாந்தா (U. K.), ரெட்ணகுமார் ஆகியோரின் தாயாரும், ஜெகநாதன் (U. K.), சறோஜினிதேவி ஆகியோரின் மாமியும், பியோனா (U. K.), டீன் (U. K.), தர்ஷனக்குமார், றஜீவ்குமார் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (13-9-96) காலை 10 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ரெட்ணகுமார்
(மகன்)

இல. 15, சந்தனமாதா கோவில் வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

(42696)

### நடுவிலார் பொன்னையா

மயிலிட்டி வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது இமையாணன், உடுப்பிட்டியில் வாழ்ந்தவருமான நடுவிலார் பொன்னையா அவர்கள் 11- 9 - 96 புதன்கிழமை காலமாகி விட்டார். இவர் இராசமலரின் அன்புக் கணவரும், கிருஷ்ணவேணி, நீலவேணி, பாமினி, ரமணி, பாரதி, ஈஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்லையா, தயானந்தன் ஆகியோரின் சகலனும், பரமேஸ்வரி, லட்சுமி, பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 12- 9- 96 வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர் எல்லோருக்கும் அறியத் தருகிறோம்.

தகவல்:
மனைவி, மக்கள்.

''துவாளி வீதி'',
இமையாணன்,
உடுப்பிட்டி.

(42694)

### தர்மலிங்கம் வீரசிங்கம்

(ஆசிரியர், யா/சண்டிலிப்பாய் இந்து மகாவித்தியாலயம்)

கொக்குவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், இணுவில் கிழக்கை வசிப்பிடமாகக் கொண்டவருமான தர்மலிங்கம் - வீரசிங்கம் நேற்று (12.09.96) காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம்- செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், சுதந்திராதேவியின் அன்புக் கணவரும், பிரதீபன், தனுசியா, லோகிதா ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற பரமலிங்கத்தினதும் நல்லம்மா அவர்களினதும் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (12.09.96) நடைபெற்று பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உறவினர்கள், நண்பர்கள் யாவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்:
வீ. சுதந்திராதேவி
(மனைவி)

இணுவில் கிழக்கு,
இணுவில்.

(42699)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈராக் மீதான அடுத்த தாக்குதல்
# எந்த நேரமும் இடம் பெறலாம்!

## வளைகுடா நோக்கி அமெ. குண்டு வீச்சு விமானங்கள்

வாஷிங்டன் செப். 13

ஈராக் மீது அமெரிக்கா மற்றொரு பெரும் தாக்குதலை எந்நேரமும் ஆரம்பிக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

பி-52 ரக ராட்சத விமானங்கள் உட்பட அமெரிக்க குண்டு வீச்சு விமானங்கள் நேற்று வளைகுடா நோக்கிச் சென்று கொண்டிருந்தன.

இதற்கு முன்னர் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன், அமெரிக்காவின் விமானிகளைப் பாதுகாக்கும் அமெரிக்காவின் திட சங்கற்பத்தை குறைத்து மதிப்பிட வேண்டாம் என்று ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசெய்னுக்கு எச்சரிக்கை விடுத்திருந்தார்.

வட ஈராக்கில் குர்டிஷ் பகுதிகள் மீது ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த அமெரிக்காவின் இரு விமானங்கள் ஈராக்கின் ஏவுகணைத் தாக்குதலுக்கு உள்ளாகியதை அடுத்தே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

இதற்கிடையில் ஐ நா. பொதுச்சபைக் கூட்டத்துக்குச் சென்ற ஈராக் உதவி வெளிவிவகார அமைச்சர் நியூயோர்க்கில் கருத்துத் தெரிவிக்கையில், அமெரிக்கா வேண்டுமென்றே பதற்ற நிலையை அதிகரிக்கச் செய்வதாகக் குற்றஞ் சாட்டினார்.

## அமெரிக்கப் போக்குக்கு ஜேர்மனி கண்டனம்

ஹவானா, செப் 13

கியூபாவில் முதலீடு செய்துள்ள வெளிநாட்டு நிறுவனங்களுக்கு எதிராக அமெரிக்கா தடைகள் விதிப்பதை ஜேர்மனியின் வெளியுறவு அமைச்சர் கண்டித்துள்ளார்.

தனது எல்லைகளைக் கடந்து சென்று ஜேர்மனி மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு எதிராகத் தடைகளை விதிப்பது எந்த விதத்திலும் ஜனநாயக முறையாகாது; அதனை ஏற்றுக் கொள்ளவும் முடியாது என அவர் கியூபாவில் அமெரிக்கத் தூதுவரிடம் தெரிவித்தார். (இ-10)

## எண்ணெய் விலை ஏற்றம்

வளைகுடாவில் தற்போது உருவாகி வரும் நெருக்கடியை அடுத்து உலக சந்தையில் எண்ணெயின் விலை அதிகரிக்க ஆரம்பித்துள்ளது.

நியூயோர்க்கில் ஒரு பீப்பாய் மசகு எண்ணெயின் விலை 63 டொலராலும், லண்டனில் 84 டொலராலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

பதற்றம் அதிகரித்தால் எரிபொருள்களின் விலை மேலும் அதிகரிக்கலாம் என எண்ணெய் சந்தை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (இ-10)

## ஞாயிறுக்கு முன் சுக்ராம் நாடு திரும்ப வேண்டும்

புதுடில்லி, செப். 13

நிதி மோசடியில் ஈடுபட்டுள்ளதாகக் கருதப்படும் —

தற்போது லண்டனில் தங்கியுள்ள —

முன்னாள் இந்திய தொலைத் தொடர்பு அமைச்சர் சுக்ராம் இம்மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் நாடு திரும்ப வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அவரது வீட்டில் இருந்து கண்டெடுக்கப்பட்ட 10இலட்சம் ரூபா மற்றும் பெருமளவிலான நகைகள் தொடர்பான விசாரணைகளில்15-9-96 க்கு முன்னர் தோற்ற வேண்டும் எனவும் —

தவறின் அவரது கடவைச் சீட்டு ரத்துச் செய்யப்படும் எனவும் —

விசாரணைகளை மேற்கொண்டு வரும் மத்திய புலனாய்வுத்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (இ-10)

## உலக அரங்கில்

## கைக்குண்டு வீச்சு

லாகூர், செப். 13

பாகிஸ்தானின் பைசலாபாத் நகரில் அமைந்துள்ள பிரதமர் பெனாஸிர் பூட்டோவின் கட்சிப்பணிமனை மீது 3 கைக்குண்டுகள் வீசப்பட்டன.

இச்சம்பவத்தில் மூவர் காயமுற்றனர் என லாகூர் நகரிலிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (இ-10)

## எயிட்ஸ் நோய் சோதனைவெற்றி

பிரிட்டனில் எயிட்ஸ் நோய்க்குக் காரணமான எச். ஐ வி. கிருமிகளைத் தடுக்கும் ஊசி மருந்துகளை குரங்குகளின் உடலினுட் செலுத்திப் பார்த்த சோதனை வெற்றி பெற்றுள்ளது.

இந்தச் சோதனையானது எயிட்ஸ்நோய்த் தடுப்புக்கான மருந்துகளைக் கண்டுபிடிப்பதில் பெரும் புரட்சியை ஏற்படுத்தியுள்ளது. (இ-10)

## நண்டுக்குள் போதைவஸ்து கடத்திய தம்பதியர்!

பாங்கொக், செப். 13

ஹிரோயின் போதைவஸ்தை நண்டுகளுக்குள் மறைத்து வைத்துக் கடத்திய தம்பதியர் தாய்வானில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தாய்வானைச் சேர்ந்த இந்த தம்பதியர் 1991 இறாத்தல் நிறையுள்ள நண்டுகளை தாய்லாந்துக்கு ஏற்றுமதி செய்திருந்தனர்.

அங்கு அனுப்பப்பட்ட நண்டுகளில் 52 நண்டுகளின் கோதுகளுக்குள் 11 இறாத்தல் ஹிரோயின் போதைவஸ்து மறைத்து வைக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

போதைவஸ்தை கடத்தும் குற்றத்தை இழைப்பவர்களுக்கு தாய்வான் நாட்டின் சட்டத்தின்படி மரண தண்டனை வழங்கப்படும். [இ-10]

## $1\frac{3}{4}$ நிமிடத்தில் முடிந்த குத்துச் சண்டைப் போட்டி!

### பார்வையாளர்கள் ஆத்திரம்

கடந்தவாரம் அமெரிக்காவில் நடைபெற்ற அதிபார குத்துச் சண்டைப் போட்டியில் மைக் டைசன் வெற்றி பெற்றது தெரிந்ததே.

போட்டி ஆரம்பமாகி ஒரு நிமிடம் 45 விநாடிகளில் அவர் புறுஸ் ஷெல்டனை ''நொக் அவுட்'' ஆக்கிவெற்றி பெற்றார்.

அனுமதிச் சீட்டுக்கு பெருந் தொகைப் பணத்தைச் செலுத்தி இந்தப் போட்டியை நேரடியாகப் பார்த்துக் கொண்டிருந்த இரசிகர்கள் போட்டி உடனடியாக முடிந்தது குறித்து ஆத்திரம் அடைந்தனர்.

போட்டியின் முடிவு குறித்து டைசனும், ஷெல்டனும் முன் கூட்டியே முடிவெடுத்து எங்களை ஏமாற்றிவிட்டனர் என அவர்கள் கோஷமெழுப்பினர்.

இந்த வெற்றியால் மைக் டைசனுக்கு 11 இலட்சத்து 50 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் கிடைத்துள்ளன.

எதிர்வரும் நவம்பர் 9 ஆம் திகதி மைக் டைசனுக்கும், இவென்டர் ஹொலிசிலுக்குமிடையே குத்துச்சண்டைப் போட்டி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

## தேசிய வருமானத்தின் காற்பங்கு யுத்தத்துக்கு!

### அமைச்சர் பீரிஸ் கவலை

கொழும்பு, செப். 13

''எதிர்வரும் நவம்பர் மாதம் ஆறாம் திகதி சமர்ப்பிக்கப்பட வேண்டிய வரவு - செலவுத்திட்டத்தைத் தயாரிப்பதில் நாட்டில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு சிரமங்களை எதிர் நோக்க வேண்டியிருக்கின்றது.

''தேசிய வருமானத்தில் 23 வீதம் யுத்தத்துக்காகச் செலவாகின்றது. இது அரசாங்கத்தால் தாங்க முடியாத சுமையாகும்.

''உலகில் எந்த நாட்டிலும் தேசிய வருமானத்தின் காற்பங்கு யுத்தத்துக்குச் செலவிடப்படுமானால் அது சுமக்க முடியாத சுமையாகவே இருக்கும்.

''எனவே இனப்பிரச்சினைக்கு விரைந்து அரசியல் தீர்வு காணப்பட வேண்டியது அவசியமாகும்.''

— இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் நீதி, அரசமைப்பு விவகார அமைச்சரும் பிரதி நிதி அமைச்சருமான பேராசிரியர் ஜி. எல். பீரிஸ்.

கட்டுகஸ்தோட்டையில் சில தினங்களுக்கு முன்னர் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

அரசினால் வழங்கக் கூடியவைகளை மட்டுமே தமிழ்க்கட்சிகள் கேட்கவேண்டும். இனப்பிரச்சினைக்கான அரசின் தீர்வுத்திட்டம் வெற்றிபெறும் வகையிலும், இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு ஏற்படும் விதத்திலும் அக்கட்சிகள் ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

இன்று நாடு முகம்கொடுக்கும் மிகப் பெரும் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டியது இந்நாட்டு புத்திஜீவிகளின் தலையாய கடமையாகும்.

''இதற்கான அரசியல் தீர்வுத்திட்டத்தின் யதார்த்த உண்மைகளை மக்களுக்குத் தெளிவு படுத்திவிட்டால் இதை ஆதரிப்பதா? அல்லது ஆட்சேபிப்பதா? என்பதை மக்களே தீர்மானிப்பர்'' என்றார். (உ-3)

## ஆயிரம் பேர் காத்திருப்பு

லண்டன், செப். 13

யாழ்ப்பாணம் வருவதற்காக கப்பல் பயணத்தை எதிர்பார்த்து ஆயிரத்துக்கும் அதிகமானோர் திருமலையில் காத்து நிற்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இப் பயணிகளை அனுப்பி வைப்பதற்காக மேலும் இரு கப்பல்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவிருப்பதாக கொழும்புப் பத்திரிகை செய்தி ஒன்று தெரிவித்தது.

இதற்கிடையில்—

யாழ்ப்பாணம்செல்வதற்காக வவுனியாவிலிருந்து 324 பேர் நேற்று ரயில் மூலம் திருகோணமலைநோக்கிப்புறப்பட்டதாக மற்றுமொரு செய்தி தெரிவித்தது. (உ-3)

# எரிபொருள் விநியோகத்தைச் சீராக்க
# கொழும்பிலிருந்து ஜெனரேட்டர்கள்

### முகவர்களுக்கு இலகு கடனில் வழங்கப்படும்

யாழ்ப்பாணம், செப். 13

குடாநாட்டில் உள்ள எரிபொருள் நிலையங்கள் துரிதமாகச் செயற்பட 15 ஜெனரேட்டர்களை கொழும்பில் இருந்து பெற்றோலியக் கூட்டுத்தாபன யாழ். பிராந்திய அலுவலகம் இங்கு எடுத்து வரவிருக்கிறது.

மின்சார வசதி இல்லாத காரணத்தால் எரிபொருள் நிலையங்களில் விநியோகம் தாமதமடைவதையடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உடனடியாக இவற்றை கப்பல் மூலம் எடுத்துவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் —

7.5 கே. வி. வலுவுள்ள ஒவ்வொரு ஜெனரேட்டரும் முகவர்களுக்கு இலகு கடன் திட்டத்தின் கீழ் வழங்கப்படவிருப்பதாகவும் —

மாதாந்தம் ஒரு தொகையைச் செலுத்தி ஜெனரேட்டரை முகவர் சொந்தமாக்கிக் கொள்ள முடியும் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

## சங்கீதமாணி நடனமாணி விரிவுரைகள்

யாழ்ப்பாணம், செப். 13

யாழ். பல்கலைக்கழகத்தில் 95/96 கல்வியாண்டுக்கான சங்கீதமாணி, நடன மாணி ஆகியவற்றுக்கான விரிவுரைகள் எதிர்வரும் 16 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட விருப்பதாக பதி[illegible] சிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை தெரிவித்தார். (இ-3)

## தீர்மானமெடுக்கும் முக்கிய காலகட்டத்தில் உள்ளோம்

### சபாநாயகர் கூறுகிறார்

கொழும்பு, செப். 13

இன்று நாம் தீர்மானம் ஒன்றை எடுக்க வேண்டிய முக்கியமான காலகட்டத்தில் இருக்கின்றோம். இந்த சந்தர்ப்பத்தில் நாம் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணாவிட்டால் எமது எதிர் காலமே இருள் சூழ்ந்ததாகி விடும்.

ராஜரட்டையில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையில் சபாநாயகர் கே. பி. ரத்னாயக்கா மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-3)

## குடாநாட்டில் மேலும் 3 உப-தபால் நிலையங்கள்

### மீண்டும் இயங்குவதற்கு ஆரம்பம்

குடாநாட்டில் மேலும் மூன்று உப - தபால் நிலையங்கள் மீள இயங்க ஆரம்பித்துள்ளன என்று யாழ். பிரதம தபாலதிபர் தெரிவித்தார்.

நாச்சிமார் கோவிலடி, கந்தரோடை, மண்டைதீவு உப-தபால் நிலையங்களே மீண்டும் செயற்பட ஆரம்பித்தன.

தொடர்ந்தும் மூடப்பட்டிருக்கும் உப - தபாலகங்களையும் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நாச்சிமார் கோவிலடி உப-தபால் நிலையம் இயங்க ஆரம்பித்ததையடுத்து —

கடந்த 6 ஆம் திகதி முதல் உதவிப்பணக் கொடுப்பனவுகள் உட்பட ஏனைய சேவைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பிரதம தபாலதிபர் தெரிவித்தார். (இ-3)

27 SEP 1996

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

காது கேட்கும் கருவி (Hearing Aid, Widex) விற்பனைக்கு உண்டு வனமாலி, விற்பனை நிலையம், 19, கண்டி வீதி, சாவகச்சேரி. (42681)

### புத்தகப் பிரியர்களே!

தரமான தமிழ் - ஆங்கில நூல்களை இரவல் பெற்று வாசித்து மகிழ விஜயம் செய்யுங்கள், லிங்க் லெண்டிங் லைப்ரறி Ling Lending Library, 41, தபாலக வீதி, சாவகச்சேரி. (42413)

### ENGLISH LITERATURE

Questions & Answer Classes for O/L - Dec'96 Students Commencement - 14 th of September. Contact – Miss U.Muthuthamby. Vinayagar Veethy, Nallur North. (Near Chandrasegara Pillaiyar Kovil, Kalviankadu) (42662)

### விவாக சேவை

மணமக்களின் பெற்றோர், பாதுகாவலர் குறிப்புக்கள், தகவல்கள் படங்களுடன் வரலாம். ''சேவை நோக்கமும் நம்பகமும்'' இல: 3, யாழ். வீதி, பலாலி வீதி, 2ஆம் ஒழுங்கை முன்பாக யாழ்ப்பாணம். (42649)

### தென்னம் நாற்றுக்கள்

உடன் நடுகைக்கு உகந்த தென்னம் நாற்றுக்கள் (பல இனங்கள்) விற்பனைக்கு உண்டு வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு. மு. காங்கேசு, ஐயா கடையடி, கண்டி வீதி, மீசாலை. (42680)

### தவறிவிட்டது

நிரஞ்சன் வள்ளிநாயகி ஆகிய எனது அடையாள அட்டை இல. 566342510V, இதனுடன் சிவில் நிர்வாக பாஸ் (Pass) நான்கும் நல்லூர் கோவில் முன்பாக தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இல. 52, இராஜேஸ்வரி வீதி, அரியாலை என்ற முகவரிக்கு அனுப்பி உதவுமாறு தயவாய்க் கேட்டுக்கொள்ளின்றேன். (42682)

### சோதிடம்

வெளியூர் ஜெனன சாதகக் குறிப்புக்கள் எழுத உங்கள் எதிர்கால பலாபலன்கள், திருமணப் பொருத்தங்கள் பார்க்க ஸ்ரீ மாவை விநாயகர் சோதிட நிலையம் இல. 158, கோவில் வீதி, முடமாவடி நல்லூர், யாழ்ப்பாணம். (42688)

### பொருளியல் 97,98

பிரத்தியேக வகுப்பு புதிய பிரிவு (நாளை) 14-09-96 பிற்பகல் 3.30-க்கு ஆரம்பமாகின்றது. ஆசிரியர், இல. 750, பலாலி வீதி, திருநெல்வேலி. (நியூ சுப்பர்ராங் பார்மசிக்கு முன்பாக) (42690)

### புலமைப் பரிசில் '96

அரசாங்கத்தால் 8 9-96 இல் நடத்தப்பட்ட புலமைப் பரிசில் பரீட்சை வினாத்தாள்களை (விடைகளுடன்) பெற்றுக் கொள்ளலாம். புதிய நாவலர் கல்வி நிலையம், நாவலர் வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (42692)

### புலமைப் பரிசில் - 97

ஆண்டு 4 மாணவர்களுக்கான மாதிரிப் பரீட்சை மாதத்தின் 1ஆவது, 3ஆவது ஞாயிறுகளில் நடைபெறும். அடுத்த மாதிரிப் பரீட்சை (01) — 15-09-96 ஞாயிறு காலை 8-15 முதல் 6 பிரிவுகளில் நடைபெறும் புதிய நாவலர் கல்வி நிலையம், நாவலர் வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். [42691]

---

மீசாலை வடக்கு
அருள்மிகு
நடராச வீரகத்தி விநாயகர் ஆலய

## 1008 சங்கா அபிஷேகமும், சதுர்த்தி விழாவும் (16-09-96)

திங்கட்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து விநாயகப் பெருமான் இரண்டு மணிக்கு திருவீதியுலாவரும் காட்சியும் இடம்பெறும். அடியார்கள் இக் காட்சியினைக் கண்டுகளித்து விநாயகரின் இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யுமாறு அன்புடன் அழைக்கின்றோம். பகல் அன்னதானமும் நடைபெறும்.

விழா உபயகாரர்களும்,
பரிபாலன சபையினரும்.

(42686)

---

## அந்தியேட்டி வீட்டுக் கிருத்திய அழைப்பு

### அமரர் சின்னத்தம்பி கந்தன்

15 08-96 வியாழக்கிழமை சிவபதமடைந்த அமரர் சின்னத்தம்பி கந்தன் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (14-09-96) சனிக்கிழமை காலை அன்னாரது இல்லத்தில் நிகழ்வுள்ளதால் அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக;
மனைவி: வள்ளி,
மக்கள்: வீரன், கண்ணகை, தெய்வநாயகி, செல்லம்மா, இந்திராணி
மருமக்கள்: தெய்வானை, சரஸ்வதி, கதிரேசு, பொன்னையா மற்றும்
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

பத்தினி அம்மாளை பிரார்த்திக்கின்றோம். அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு துயர் துடைத்து எமக்கு ஆறுதல் அளித்த அன்பர்கள், நண்பர்களுக்கு எமது நன்றிகளைக் கூறிக்கொள்கின்றோம்.

தகவல்:
சி சுபேந்திராதேவி
(பேர்த்தி)

''சுபேந்திராதேவி இல்லம்''
பத்தினி கோவில் வீதி,
துன்னாலை, கரவெட்டி.

(42693)

---

10 சதவீத அதிகரிப்பு:

## வடமாநில ஓய்வூதியர் சம்மேளனம் ஏமாற்றம்

1997 ஜனவரி முதல் அரச ஊழியர்களின் சம்பளம் 50 சத வீதத்தாலும்— ஓய்வூதியக் கொடுப்பனவுகள் 10 சத வீதத்தாலும்— அதிகரிக்கப் படும் என அரசாங்கம் விடுத்துள்ள அறிவிப்புக் குறித்து வட மாநில ஓய்வூதியர்கள் சங்கங்களின் சம்மேளனம் தனது ஏமாற்றத்தையும் கவலையையும் வெளியிட்டுள்ளது.

ஓய்வூதியர்களும் அரச ஊழியர்களைப் போலவே ஜனாதிபதியால் சமமாக கவனத்தில் கொள்ளப்படுவர் என தாம் கொண்டிருந்த நம்பிக்கைக்கு முற்றிலும் மாறுபட்டதாக இந்த அறிவிப்பு அமைந்துள்ளதாக சம்மேளனம் தெரிவித்துள்ளது.

சம்பளம் அதிகரிக்கப்படும் போது பணவீக்கம் ஏற்படுவது இயல்பு எனவும்—

ஓய்வூதியர்களின் கொடுப்பனவுகள் அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்புக்குச் சமமான வீதத்தில் அதிகரிக்கப்படாவிடில் பணவீக்கத்தால் ஏற்படும் பாதிப்பு ஓய்வூதியர்களை மேலும் பாதிக்கும் எனவும் அந்தச் சம்மேளனம் ஜனாதிபதிக்கு எழுதியுள்ள மகஜரில் குறிப்பிட்டுள்ளது (இ-10)

## அரச ஆஸ்பத்திரி தாதியர் வேலை நிறுத்த முஸ்தீபு

கொழும்பு, செப். 13

அரச ஆஸ்பத்திரிகளில் பணிபுரியும் தாதிமார்கள் வேலை நிறுத்தம் செய்யப்போவதாக அவர்களின் சங்கம் எச்சரித்துள்ளது

சங்கம் முன்வைத்துள்ள கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு, அரசாங்கத்துக்குத் தாதிமார் சங்கம் மூன்று வாரக் காலக் கெடு விதித்துள்ளது.

சம்பள உயர்வு உட்பட தமது சங்கத்தால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை அரசு மூன்று வாரங்களில் நிறைவேற்றாவிடில் —

தாதிமார் சங்க உறுப்பினர்கள் வேலை நிறுத்தத்தில் குதிக்க நேரிடும் என்று சங்கத்தின் தலைவர் வண. ஆனந்த முத்தெட்டுவ தேரர் எச்சரித்திருக்கிறார்.

இதே வேளை—

தென் மாகாண சபையின் கீழ் இயங்கும் ஆஸ்பத்திரிகளைச் சேர்ந்த 1,500 தாதிமார் நேற்று மறியல் போராட்டத்தில் குதித்தனர்.

தென் மாகாண சபை சுகாதார அமைச்சின் அலுவலகத்தின் முன்னால் ஆரம்பிக்கப்பட்ட மறியல் போராட்டம் கோரிக்கைகள் நிறைவேறும் வரை தொடரும் என அறிவிக்கப்பட்டது. (அ-3)

## பல்கலை மாணவருக்கான ஆங்கில வகுப்பு

யாழ்ப்பாணம், செப். 13

யாழ். பல்கலைக்கழகத்தில் 95/96 கல்வியாண்டில் பயிலும் மருத்துவ, விஞ்ஞான பீடங்களின் மாணவர்களுக்கான ஆங்கில வகுப்புகள் எதிர்வரும் 16 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவிருக்கின்றன.

விஞ்ஞான பீடமாணவர்களுக்கான வகுப்புக்கள் விஞ்ஞான பீடத்திலும்-

மருத்துவபீட மாணவர்களுக்கான வகுப்புகள் கலைப் பீடத்திலும்- நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## சின்னக்கடைப் பகுதியில் ஐந்து இறைச்சிக் கடைகள்

### அமைக்கும் வேலைகள் நடக்கின்றன

குருநகர், செப். 13

யாழ். மாநகர சபை வேலைப் பகுதியினரால் சின்னக்கடைப் பகுதியில் இறைச்சிக்கடைகள் அமைக்கும் வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இங்கு நான்கு மாட்டிறைச்சிக்கடைகளும், ஓர் ஆட்டிறைச்சிக் கடையும் அமைக்கப்படுகின்றன.

இந்த வேலைகள் இன்னும் பூர்த்தி அடையாததால் பொதுமக்கள் இறைச்சியை இறைச்சிக்கடை உரிமையாளர்களின் இல்லங்களிலேயே வாங்கி வருகிறார்கள். (இ-51)

## மாதாந்த உதவிப் பணம் பற்றிஅறிவுறுத்து

யாழ்ப்பாணம், செப். 13

வலிகாமம் வடக்கு பிரதேச செயலர் பிரிவை நிரந்தரமான வசிப்பிடமாகக் கொண்டு, தற்சமயம் பிற பிரதேச செயலர் பிரிவுகளில் வசிக்கும் பொதுசன மாதாந்த உதவிக் கொடுப்பனவு பெறுபவர்கள் இதுவரை தமது பெயர் விவரங்களை பிரதேச செயலகத்தில் பதியாவிட்டால் உடன் பதியுமாறு வலி-வடக்கு பிரதேச செயலர் திரு. என். வேதநாயகன் கேட்டுள்ளார். (இ-3)

---

உ

## ★ பூப்புனித நீராட்டு விழா அழைப்பு ★



அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான தாது வருடம், ஆவணித்திங்கள் 30ஆம் நாள் (15-09-96) ஞாயிற்றுக்கிழமை சித்திரை நட்சத்திரமும், அமிர்த சித்த யோகமும், தனு இலக்கினமும் கூடிய காலை 11.30 மணி தொடக்கம் 1-30 மணி வரையுள்ள சுபவேளையில்,

எமது புதல்வி

### செல்வி அனுராதா (அனு)

அவர்களுக்கு

பூப்புனித நீராட்டு விழா நடாத்த இறையருள் கூடியமையால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து செல்வியை ஆசீர்வதித்துச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.



தங்கள் நல்வரவை நாடும்,
திரு. திருமதி நவரத்தினம்
''துர்க்கை அம்மன்''

படித்த மகளிர் குடியேற்றம்,
மிருசுவில்.

(42679)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY JAFFNA

உதயன்

# இன்றைய எமது கஷ்டங்கள் நீங்குவதற்கு நம்மிடம் உண்மையான பக்தி வேண்டும்

இனி என்ன நடக்கும்? எங்கள் நிலையில் மாற்றம் இல்லையா?

இவ்வாறு பலர் ஏங்கித் தவிக்கும் இந்நாளில் எமக்கு யார் துணை? பலர் காடுகளில் வழி தெரியாமல் தவிக்கும் வேளையில் எம்மை ஈடேற்ற ஒரு தெய்வம் உண்டா? என்று பலர் கேட்கிறார்கள்.

இதற்கு ஒரு பதில் தான் உண்டு. எமது கஷ்டங்கள் நீங்குவதற்கு எம் மத்தியில் உண்மையான பக்தி மலர்ந்து பரவ வேண்டும் என்பதே அந்தப் பதில்.

நம்மிடையே வாழ்ந்த கொழும்புத்துறை யோகர் சுவாமிகள் நமக்கெல்லாம் சோதியாய் ஒளியாய் விளங்குகின்றார். அவரது தரிசனம் பெற்றவர்கள் அவரை நன்கு அறிவர்.

வெறும் வேடம் பூணாமல் சிவனடியே சிந்தித்து சீவன்முத்தராக நமது கண் முன்னே உலாவிவந்த பெரிய மகான் யோகர் சுவாமிகள்.

இவரது சீடரான கந்த சுவாமி "யோகர் சுவாமிகளைக்கண்டவர்கள்கடவுளை நேரில் தரிசிக்கும் பாக்கியம் பெற்றவர்கள்" என்று சிவதொண்டன் மலரில் குறிப்பிட்டிருந்தார்.

சுவாமிகள் தனது நற்சிந்தனையில் ஒரு தீர்க்கதரிசனமான செய்தியைக் கூறியுள்ளார்.

சுவாமிகள் காசியிலிருந்து எழுதிய கடிதம் பெரிய உண்மைகளை 1940ஆம் ஆண்டிலே பறைசாற்றின.

தேடித்திரிந்து காசிக்கு வந்து கண்டேன் விசுவநாதனை என்னுள், வாடித் திரிந்து வருந்தவேண்டாம் —

## ஞானக்கதிர்

தேடிய பூடு காலுக்குள்ளே என்ற தெவிட்டா வாசகமொன்றுண்டு. இவ்விடத்தி

சித்தி பெறலாம் திருவெல்லாஞ் சேரலாம்
பத்தியின்றேல் என்ன பலனிவற்றால் — எத்திசையும்
மெச்சு புகழிலங்கை மேலோர்கள் வந்து தினம்
நச்சு மிலங்கை யென்னூர் நாடு.

நாடி யொருகருமம் நாடோறு மாற்றுபவர்
வாடி மெலிவதில்லை மாநிலத்தில் — நீடியசீர்
கொண்ட இலங்கையிலே கோடிசனம் வந்துபணம்
கொண்டு செல்வார் என்னூர் குறி

லும் மனிதர்களெல்லாம் எங்களைப் போலவேதானிருக்கிறார்கள். நூதனமான காரணமொன்றும் பூதலமீதில் லவே இல்லை. இருந்த, இருக்கிற, இருக்கும் யாழ்ப்பாணத்தாரெல்லாருக்குமாகக் கருமாதிகளெல்லாம் செய்து முடிந்து விட்டன. இனிமேலுங்களுக்கியைந்தபடி அன்பாக உலகில் நடந்து ஆண்டவன் அடிக்கீழ் அமர்ந்து வாழ்க.

சுவாமிகளது வாழ்க்கையும் வழிகாட்டலும் தான் எம்மை உய்விக்கும் அருமருந்து என்று உணர்ந்து இனியும் காலம் தாழ்த்தாது சிவ தொண்டு செய்வோமாக.

- சுவாமி சித்ருபானந்தா

## பங்கீட்டுக்கு 5 லீற்றர் ம. எண்ணெய்

மானிப்பாய் ப. நோ. கூ. சங்கம் பங்கீட்டு அட்டைக்கு 5 லீற்றர் மண் எண்ணெய் வீதம் பாவனையாளர்களுக்கு வழங்கி வருகின்றது.

[இ-100]

## விவசாயப் பொருளாதாரம்

யாழ்ப்பாணக் குடா நாட்டில் இப்போது மிகவும் மலிவான உணவுப் பொருள் என்றால் மரக்கறி வகைகள் தான். காரணம் அவை இம்முறை அமோக விளைச்சல் கண்டுள்ளதே.

வலிகாமம் பகுதி விவசாயிகள் 6 மாதங்கள் இடம் பெயர்ந்து இருந்தவர்கள். ஆனால் சொந்தப் பிரதேசத்துக்குத் திரும்பியதும் தமது தொழிலை மீண்டும் விரைவாகத் தொடங்கினர் அதனாலேயே மக்களுக்கு மூன்று மாதங்களிலேயே மரக்கறிகள் கிடைக்கத் தொடங்கின. மே மாதம் முதல் ஜூலை மாதம் வரை வான்பயிர்கள் தந்த வாழைக்காயும், பலாக் கொட்டையும் மாங்காயும் முருங்கைக்காயும் தான் வீட்டுக்கு வீடு பிரதான மரக்கறிகளாக இருந்ததை மறந்து விட முடியுமா?

வலிகாமம் விவசாயிகள் தாம் வந்து சேர்ந்த சொற்ப கால இடைவெளியில் மரக்கறிச் செய்கையைத் தொடங்கி, அதில் நல்ல விளைச்சல் காண்பதற்கு அரசாங்கம் வழங்கிய உதவிகள் பெரிதும் உதவின.

எனினும் விலை வீழ்ச்சியினால் விவசாயிகள் உழைப்புக்கேற்ற வருமானம் பெற முடியவில்லை. நஷ்டமடையவும் நேரிட்டிருக்கலாம். விளைபொருள்களைஇடத்துக்கிடம் எடுத்துச் சென்று சந்தைப்படுத்துவதில் உள்ள சிரமங்கள், கஷ்டங்கள், தடங்கல்கள் மரக்கறிவிலைகள் மெத்தவும் இறங்கிப் போனதற்குக் காரணம் எனலாம்.

விலை வீழ்ச்சியினால்பாதிப்புற்ற விவசாயிகளில் வெங்காய உற்பத்தியாளரும் அடங்குவர். அவர்களுக்கு உதவும் பொருட்டு இங்கு உற்பத்தியான வெங்காயத்தைக் கப்பல் மூலம் கொழும்புக்கு பெருமளவில் அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது மிகவும் வரவேற்கத் தக்க ஒன்றாகும். வெங்காயம், மிளகாய் ஆகிய உப உணவுப் பொருள்களை உற்பத்தி செய்து தெற்கே அனுப்பி நியாயமான வருவாய் பெற்றவர்கள் குடா நாட்டு விவசாயிகள். அந்த நிலை மீண்டும் வருவது குடா நாட்டின் விவசாயப் பொருளாதாரம் வளர்வதற்கான நல்ல அறிகுறி எனலாம்.

யாழ்ப்பாணத்தில் வெங்காயம், மிளகாய், உருளைக் கிழங்கு ஆகிய உப உணவுப் பொருள்கள் பெரும் விளைச்சல் கண்ட வேளைகளில் எல்லாம் —

வெளிநாடுகளில் இருந்து அவற்றை இறக்குமதி செய்து குடாநாட்டு விவசாயிகளின் வயிற்றில் அடித்த ஐக்கிய தேசியக் கட்சியின் வர்த்தக அமைச்சர் லலித் அத்துலத் முதலியை — இலகுவில் மறந்து விடுவதற்கு இல்லை!

குடாநாட்டு விவசாயிகள் உற்பத்தி செய்த வெங்காயம் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்படும்வேளை, வெளிநாட்டு இறக்குமதியை நிறுத்துவது என்ற இப்போதைய அரசின் நடவடிக்கை வரவேற்கத்தக்கதாகும்.

வெங்காயத்தை மட்டுமன்றி ஏனைய விளை பொருள்களையும் தெற்கே எடுத்துச் செல்ல வசதி செய்யப்பட்டால், இங்கு தரை வழிப் பாதையைத் திறக்கக் கூடிய சமாதான நிலை உருவாக்கப்பட்டால், குடா நாட்டின் விவசாயப் பொருளாதாரம் மேலும் சீர் அடையும்.

## முன்வந்து காப்பாய்!

உருகியே கனிந்து நின் றுன்னருளை முன்பென்றும்
உன்னிடாக் கயவர் நாங்கள்
ஒருவாத நெஞ்சமும் பெருகாத கண்ணீரும்
ஒரு காலத் துடையர் நாங்கள்
பெருகியே கடலாகி மூடிடுந் துயர்கண்டு
பித்தராய்க் கதறுகின்றோம்
பேணியே நின்றுனது நாமங்கள் ஆயிரம்
பிதற்றிடத் தொடங்கி விட்டோம்
அருவியாய்ப் பனிப்பாகு கடலைதின் பண்டங்கள்
அவற்றுடன் பொம்மை வளையல்
அழகான எவர்சில்வர் பாத்திரம் பண்டங்கள்
அவைவாங்க வந்த காலம்
முருகனே! நல்லைநகர் வாசனே! கனவாகி
முடிந்ததின் றவைநினைக் கோம்
முத்தைய உன்னடியி னருள்தேடி வந்தனம்
முன்வந்து காக்குவாயே.

— சொக்கன்

## பூங்காவனப் பொன்னாள்

இராகம்: பிருந்தாவன சாரங்கா தாளம்: ஆதி

வள்ளிமண வாளனுக்குப் பூங்காவனம் — நல்லை
வண்ணமயில் வேலனுக்குப் பூங்காவனம் (வள்ளி)

ஆணிப் பொன் முத்து மாணிக்கம் வைரம்
அவை தொங்க அசைந்தாடுமே! — ஊஞ்சல்
அழகாக இசைந்தாடுமே!
பன்னீரின் வாசம் விண்மீன்கள் கோலம்
பழகாத பூங்காவனம்! — இது
அழகான பூங்காவனம்! (வள்ளி)

மாலதி தேவர் மணங்காண வந்தார்
மணமாலை இவன் சூட்டுவான் — தினைப்
புனமாது தலை நீட்டுவாள்!

பாவாணர் வாழ்த்துக்கவி பாடி நின்றார்
பருகாத செவியில்லையே! முருகா
உருகாத மனமில்லையே! (வள்ளி)

மேளம் முழங்கும்; நாதஸ்வரங்கள்
வெகுதூரம் வரை கேட்கும்! நல்லூர்
விண்நாட்டை நினை வூட்டுமே!

ஈழம் மயங்கும் மணநாள் இந்நாளே
எங்களுக்குப் பொன்னாளாகுமே! முருகன்
தன்னோடெம் உளம் ஏகுமே! (வள்ளி)

கொழும்புத்துறையூர் - சி. சி. வரதராசா

## மணம்கொண்டான் முருகன்

இராகம்: ஆனந்தபைரவி தாளம்: ஆதி

பல்லவி

குறமகள் வள்ளியவள் மனம்வென்றான் — தேவ
குலமகள் குஞ்சரியை மணம்கொண்டான் — முருகன்!
(குற ......)

அனுபல்லவி

குவலயம் புகழ்பாடும் பழையநகரிலே — தமிழ்க்
குலத்தவர் மகிழ்ந்தாண்ட நல்லைநகரிலே — இன்று
(குற ..... )

சரணம்

பார்த்தவர் விழியெல்லாம் பனிக்கும்வண்ணமே — மணம்
பார்த்தவர் உடலெல்லாம் சிலிர்க்கும்வண்ணமே
— இதைக்
கண்டோர்கள் நிதமெண்ணிப் புகழும்வண்ணமே
— விழாக்
கண்டோர்கள் எழிலெண்ணித் திளைக்கும்வண்ணமே
— கடம்பன்
(குற ... )
வாழ்க்கையின் உயர்நோக்கம் விளங்கும்வண்ணமே
— புவி
வாழ்க்கையின் உயிரோட்டம் துலங்கும்வண்ணமே
— மண
வாழ்க்கைக்குப் பொருள்கூட்டி விளக்கும்வண்ணமே
— உயர்
வாழ்க்கைக்கு எழில்கூட்டித் துலக்கும்வண்ணமே
— ஐயன்
(குற ......)

நல்லூர் உற்சவ கால சிறப்பம்சம்

## மின்சாரம் கிடைக்குமா?

இலங்கை மின்சாரசபை யாழ். மாநகர சபையின் சில பகுதிகளுக்கு மின்பிறப்பாக்கி மூலமாக மின்சாரம் வழங்கி வருவதனை யாவரும் அறிவர். மின்சாரசபையின் இம் முயற்சியைக் கண்டு வண்ணார்பண்ணை மக்களாகிய நாம் மிகவும் ஆவற்பட்டு எங்கள் வீட்டு மின் தொடர்புகளைத் திருத்தம் செய்து எமக்கும் மின்சாரம் வழங்கப்படும் என்று எதிர்பார்த்து இருந்தோம். எங்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டது. மகிழ்ச்சி அடைந்தோம். ஆனால் இரண்டு நாள்களில் அந்த மகிழ்ச்சி மறைந்தது. மின்சாரம் வேறு காரணங்களுக்காகக் பாவிக்கப்படுவதாகக் கூறி இப்பகுதியில் உள்ள எல்லா வீடுகளினதும் மின் கம்பிகளும் துண்டிக்கப்பட்டன.

மாணவர்களின் கல்வி நலன் கருதி, ஒவ்வொரு வீட்டிலும் மூன்று மின் விளக்குகள் பாவிக்கக் கூடியதாக மின்சாரம் வழங்க மின்சாரசபை நடவடிக்கை மேற்கொண்டால் மிகவும் பயன் உடையதாக அமையும். இது விடயத்தில் மின் பொறியியலாளர் உரிய நடவடிக்கை மேற்கொள்வாரா?

குடா நாட்டு மக்கள் கடந்த 6 வருட காலமாக மின்சாரம் இன்றி வாழ்ந்து வந்தனர். ஆனால் எமது அயலில் மின் பிறப்பாக்கி இயங்கியும் ஓட்டுமடம் வீதி, பி. ஏ. தம்பி லேன் போன்ற இடங்களில் வசிப்போருக்கு மின் வசதி இன்றி ஏங்கிக் கொண்டிருப்பது கைக்கு எட்டியும் வாய்க்கு எட்டாத துரதிஷ்ட நிலையாகும்.

இவ்விடயத்தில் மின்சார சபையினர்ஊக்கமெடுத்து மாநகரசபையின் எல்லாப் பகுதிகளில் வாழ்வோருக்கும் மின்சாரம் வழங்க ஏற்ற நடவடிக்கை எடுப்பார்கள் என்று ஆவலுடன் எதிர்பார்க்கிறோம். செய்வார்களா? இல்லையேல் உரிய காரணத்தை அறிவிப்பார்களா?

எஸ். பாலசிங்கம்
கு. பார்வதி
க கனகசுந்தரம்

வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

## கொடுப்பதோ அரைக்கிலோ விதிப்பதோ நிபந்தனை

விற்பனைத் திணைக்களத்தில் ஏற்பட்ட கசப்பான அனுபவத்தை மற்றவர்கள் அறிய வேண்டும் என்பதற்காக இதனை எழுதுகிறேன்.

வரிசையில் நின்றுதான் பொருள் வாங்கியாக வேண்டும் என்ற நிலைப்பாடு. சீனியும் இல்லாவிடில் தேநீரும் அருந்த முடியாத கஷ்டம். எனவே சீனி வாங்குவதற்காக நகரில் உள்ள ஒரு விற்பனைத் திணைக்களக் கிளையின் முன்னால், ஏனையோருடன் நின்றேன்.

வாசகர் திருமுகம்

சிட்டை போடும் இடத்திற்கு அண்மித்ததும் "2கிலோ சீனி" என்றேன். 2 கிலோ தரமுடியாது ½ கிலோ மட்டும் தர முடியும் என்றார். அதுவும் வேறு சில பொருள்கள் வாங்க வேண்டும் என்று நிபந்தனையும் விதிக்கப்பட்டது. வேறு பொருள்கள் தேவைப்படாததால் சீனியும் வாங்காமலே திரும்பி விட்டேன்.

ஒன்று; நிபந்தனையை முன் கூட்டியே தெரிவித்திருந்தால் வரிசையில் நிற்காமல் தவிர்த்திருக்கலாம். மற்றது அரைக்கிலோ வாங்க, வேறுபொருள்கள் வாங்க வேண்டும் என்று நிபந்தனை விதிப்பதும் பொருத்தமில்லை. சீனி வாங்கும் எல்லோருக்கும் வேறு பொருள்கள் தேவைப்படும் என்பதில்லை.

பொருள்களை வாங்க உள்ள கஷ்டத்தை நோக்காதார் எவருமே இருக்க முடியாது. காசுக்குக் கஷ்டமான காலகட்டத்தில் இப்படியான நிபந்தனை விதிப்பது ஒவ்வாததாகும். சம்பந்தப்பட்டவர்கள் இதில் கவனம் எடுத்து நிபந்தனை விதித்துத் தட்டுப்பாடான பொருள்களை விற்கும் நடைமுறையை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும்.

வி. அரியநாயகம்

நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதை நெல்லை மாத இறுதிக்குள் கப்பல் மூலம் எடுத்துவர ஏற்பாடு

யாழ்ப்பாணம், செப். 13 குடாநாட்டு விவசாயிகளுக்குத் தேவையான விதை நெல்லை இம்மாதம் இறுதிக்குள் கப்பல் மூலம் எடுத்துவர ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக யாழ். அரச அதிபர் தெரிவித்தார்.

குடாநாட்டுக்குத் தேவையான விதை நெல்லை தெற்கில் இருந்து எடுத்து வந்து கொழும்பு துறைமுக களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்தும் பணி நேற்று ஆரம்பமானதாகவும்—

விதை நெல் களஞ்சியப் படுத்தப்பட்டதும் கப்பல் மூலம் எடுத்துவரப்படுமென்றும் அவர் தெரிவித்தார்.

எடுத்துவரப்படவிருக்கும் விதை நெல் இரண்டரை மாதத்தில் அறுவடை செய்யக் கூடிய இனம் என்றும்—

மாத இறுதியில் வந்து சேர்ந்ததும் விதைத்து பலனைப் பெறமுடியும் என்றும் — அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

## கடலட்டை, புகையிலை கப்பலில் அனுப்ப இடவசதி

யாழ்ப்பாணம் செப். 13 பருத்தித்துறையில் தற்சமயம் தரித்து நிற்கும் ''ரீயூனியன்'' கப்பலில் புகையிலை, கடலட்டை ஆகியவற்றை ஏற்றி அனுப்ப விரும்புபவர்கள் உடன் செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அரச அதிபர் கேட்டுள்ளார்.

இக்கப்பல் இன்னும் 3 நாள்களில் கொழும்பு நோக்கி புறப்படவிருக்கிறது. (இ-3)

## கோப்பாய்ப் பிரதேச விசேட அடையாள அட்டை

### நாளை விநியோகிக்க ஏற்பாடு

கொழும்புத்துறை, செப். 13 வலிகிழக்கு பிரதேச செயலர் பிரிவின், இருபாலை தெற்கு, கல்வியங்காடு, இருபாலை கிழக்கு, கோப்பாய் தெற்கு, கோப்பாய் மத்தி, உரும்பராய் தெற்கு, உரும்பராய் மேற்கு ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் உள்ளவர்களுக்கான விசேட அடையாள அட்டைகள் நாளை சனிக்கிழமை காலை 10. 00 மணி தொடக்கம் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரிக்கு முன்பாகவும் —

கோப்பாய் வடக்கு, உரும்பராய் வடக்கு, உரும்பராய் கிழக்கு, ஊரெழு, நீர்வேலி தெற்கு, நீர்வேலி வடக்கு, நீர்வேலி மேற்கு, சிறுப்பிட்டி கிழக்கு, சிறுப்பிட்டி மேற்கு, புத்தூர் மேற்கு, புத்தூர் கிழக்கு, அச்செழு, வாதரவத்தை ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் உள்ளவர்களுக்கான விசேட அடையாள அட்டைகள் நாளை சனிக்கிழமை காலை 10. 00 மணி தொடக்கம் கோப்பாய் பிரதேச செயலகத்திலும் —

வளலாய், இடைக்காடு, தம்பாலை, கதிரிப்பாய், பத்தமேனி, அச்சுவேலி வடக்கு, அச்சுவேலிமேற்கு, அச்சுவேலி தெற்கு, ஆவரங்கால் கிழக்கு, ஆவரங்கால் மேற்கு, புத்தூர் வடக்கு, நவக்கிரி ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் உள்ளவர்களுக்கான விசேட அடையாள அட்டைகள் ஆவரங்கால் மேற்கு, கிராம உத்தியோகத்தர் அலுவலகத்தில் நாளை சனிக்கிழமை காலை 10.00 மணி தொடக்கமும் வழங்கப்படவுள்ளன.

சம்பந்தப்பட்டவர்கள் தமது கிராம உத்தியோகத்தர்களுடன் தொடர்பு கொண்டு தமது பெயர்களை உறுதிப்படுத்திய பின் குறிக்கப்பட்ட திகதியில் சென்று தமது அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்ளும்படி கோரப்பட்டுள்ளது. (இ- 30)

## ஆரம்பக் கல்வி முறை முற்றாக மாற்றப்படும்

கொழும்பு, செப். 13 சிறிலங்காவில் ஆரம்பக் கல்வி முறை முற்றிலுமாக மாற்றப்பட வேண்டும் என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா கல்விக் கொள்கை வகுப்பாளர்களுக்குப் பணிப்புரை வழங்கியுள்ளார்.

அடுத்த ஆண்டு முடிவடைவதற்கு முன்னர் ஆரம்பக் கல்வி தொடர்பான புதிய கொள்கை வகுக்கப்படவேண்டும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளதாக '' தினமின '' சிங்கள நாளிதழ் தெரிவித்துள்ளது. (இ-10)

## உ. கிழங்கு உற்பத்தியில் விவசாயிகள் ஆர்வம்

1996 — 97 ஆம் ஆண்டுக்கான உருளைக்கிழங்கு செய்கையில் ஈடுபட வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவில் இருந்து அதிகளவு தோட்டச் செய்கையாளர்கள் ஆர்வம் காட்டிவருகின்றனர்.

உடுவில் பிரதேச செயலர் பிரிவினரின் திட்டப்பகுதியால்திரட்டப்பட்டுள்ள புள்ளி விவரங்களின்படி விதை உருளைக் கிழங்கைப் பெற்றுக்கொள்ள 486 தோட்டச் செய்கையாளர்கள் இப்பிரிவில் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ளனர்.

விண்ணப்பதாரர்கள் கொடுத்த தரவுகளின் படி மேற்படி பிரதேச செயலர்பிரிவில் 1996 — 97 ஆம் ஆண்டு காலபோகத்தின் பொழுது 3018 பரப்பு நிலத்தில்(சுமார் 75 ஹெக்ரேயர்) உருளைக் கிழங்குப் பயிர் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற மாவட்ட விவசாயக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கமைவாக இப்பிரதேசத்தைச் சேர்ந்த உருளைக்கிழங்கு பயிரிட உத்தேசித்துள்ள தோட்டக்காரர்களின் விவரங்களும் உத்தேச தோட்டச் செய்கைநிலப்பரப்பும் பிரதேச செயலகத்தினால் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (இ-152)

மரண அறிவித்தல் 2 ஆம் பக்கத்தில்

## கொழும்பு செல்லும் நோயாளருக்கு

யாழ்ப்பாணம் செப். 13 வைத்தியசாலைப் பணிப்பாளரிடம் பதியப்பட்ட கொழும்பு செல்ல வேண்டிய நோயாளர்களும் உதவியாளர்களும் பிரயாணத்துக்குரிய ஆவணங்களுடன் எதிர்வரும் 18 ஆம் திகதி புதன் கிழமை காலை 7- 00 மணிக்கு பணிப்பாளரின் பணிமனையில் தவறாது சமுகம் அளிக்குமாறு கோரப்பட்டுள்ளனர். (இ)

## சமய சந்நிதிகளில்

யாழ் வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலய வருடாந்த உற்சவம் நாளை சனிக்கிழமை கொடி ஏற்றத்துடன் ஆரம்பமாகிறது. மு.ப. 10. 45 மணிக்குக் கொடி ஏற்றப்படும்.

மொத்தம் பத்து நாள்களுக்கு நடைபெறும் வருடாந்த உற்சவத்தில் ஒன்பதாம் நாளான இம் மாதம் 22 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் அடுத்த நாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

மாலைத் திருவிழா பி. ப. 3 மணி முதல் மாலை 6 மணி வரையும் நடைபெறும். (அ-30)

★ ★ ★

நல்லூர் கந்தசாமி கோயில் பூங்காவனத் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு உள்வீதியில் நடைபெறும். அதன் பின்னர் முருகன் வள்ளி, தெய்வானை சமேதரராகப் பூந்தண்டிகையில் உள்வீதி வலம்வந்து அடியார்களுக்குத் திருவருள் பாலிப்பார். (அ-30)

★ ★ ★

சரித்திரப் பிரசித்தி பெற்ற வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த புதன் கிழமை முற்பகல் 11மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

கொடியேற்ற தினத்தன்று பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் உற்சவத்தில் கலந்து கொண்டனர். (அ-173)

★ ★ ★

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலை ஸ்ரீ விநாயகர் ஆலய மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை காலை 6 மணியளவில் நடைபெறும்.

இக் கும்பாபிஷேகத்திற்கான கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை காலை ஆரம்பமாகின்றன.(அ-173)

★ ★ ★

நுணாவில் மேற்கு கொல்லங்கிராய் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு சங்காபிஷேகமும் இதனை அடுத்து, மணவாளக் கோல விழா, திருவூஞ்சல், திருவீதி உலா ஆகியனவும் நடைபெறும். (அ-30)

## மீண்டும் விசர்நாய்க் கடி சம்பவங்கள்

கடந்த திங்களன்று இடம்பெற்ற இரு வெவ்வேறு சம்பவங்களில் இருவர் விசர்நாயினால் கடியுண்டனர். மாடு ஒன்றையும் விசர் நாய் கடித்தது.

தீவகத்தில், நாரந்தனையில் அலோசியஸ் இஸ்பிரித்தம்மா (வயது 47) என்பவர் விசர் நாயினால் கடியுண்டார். இவரைக் கடித்த நாயே இவரது மாட்டையும் கடித்தது.

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதிப் பகுதியில் சோதிலிங்கம் சர்மிளன் (வயது 8) என்ற சிறுவன் விசர் நாயினால் கடியுண்டார். (இ-15)

## நேற்றும் 127 ஈழ அகதிகள் தமிழகம் சென்றனர்

சென்னை, செப். 13 இலங்கையில் இருந்து 54 குடும்பங்களைச் சேர்ந்த 127 பேர் நேற்று இராமேஸ்வரம் வந்து சேர்ந்தனர்.

நாச்சிக்குடாவில் இருந்து இவர்கள் மூன்று பிளாஸ்டிக் படகுகளில் வந்திருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## பொலீஸ் அத்தியட்சகரை கைது செய்ய உத்தரவு

கொழும்பு, செப். 13 பொலீஸ் அத்தியட்சகர் டக்ளஸ் பீரிஸை உடனடியாக கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு கம்பஹா நீதிவான் சுமத்திரபால இரகசியப் பொலீஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இருநபர்கள் கடத்தப்பட்ட மற்றும் ஒருவர் காணாது போனது தொடர்பாக வழக்குத்தாக்கல் செய்யப்பட்ட போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (இ 3)

## மரையை கொன்ற சிப்பாய்கள்

கொழும்பு, செப். 13 ரந்தெனிகல நீர் மின் உற்பத்தி நிலைய பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த இராணுவச் சிப்பாய்கள் ஐவரும் மின்சாரசபை அதிகாரி ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ரந்தெனிகல வனவிலங்கு சரணாலயப் பகுதிக்குள் சட்டவிரோதமாக மரை ஒன்றைக் கொன்ற சம்பவம் தொடர்பாகவே இவர்கள் வனவிலங்குப் பாதுகாப்பு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர் என ''லங்காதீப'' நாளிதழ் தெரிவிக்கிறது. (இ-10)

## கிழக்கில்.....

(1 ஆம்பக்கத் தொடர்ச்சி)

படுகாயமடைந்த 6 பேர் சிகிச்சைக்காக பொலன்னறுவை ஆஸ்பத்திரிக்கு விமான மூலம் எடுத்துச் செல்லப்பட்டனர் —

தாக்குதலை நடத்தியவர்கள், கைக்குண்டுகளை ஏந்தியவாறு தப்பிச் சென்று விட்டனர் — என்பதாகும். (அ-இ-3)

## இணைப்புக் குழு..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

படுவார்கள் என்றும் அவர் கூறினார்.

புளொட் அமைப்பைச் சேர்ந்த ஐயம்பிள்ளை மாணிக்கம்பிள்ளை கருத்துத் தெரிவிக்கையில், இப்படியான ஒரு குழுவை நியமிக்க முன்னர் வடக்கு - கிழக்கு பிரதேச மக்களைப் பிரதிநிதித்துவம் வகிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் அரசு கலந்தாலோசித்திருக்க வேண்டும். இந்தக் குழுவின் நடவடிக்கைகளில் புளொட் அமைப்பு கலந்து கொள்ள மாட்டாது என்றார்.

தமிழ் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம் கருத்துத் தெரிவிக்கையில், தற்போது தமிழ் பகுதிகளில் யுத்தம் நடைபெறுகிறது. இப்படியான நேரத்தில் எவராவது அங்கு புனர்வாழ்வு, புனர்நிர்மாணப் பணிகளை மேற்கொள்வது குறித்துச் சிந்திக்க முடியுமா? என்று கேட்டார்.

இதற்கிடையில் வடக்கு -- கிழக்கு இணைப்புக் குழுவின் செயலாளராகநியமிக்கப்பட்ட வடக்கு — கிழக்கு மாகாண ஆளுநர் காமினி பொன் சேகாவும்சாதகமான கருத்துக்களை முன் வைக்கவில்லை.

பல்வேறு உள்ளூராட்சி நிறுவனங்களைச் சேர்ந்த பல பிரதிநிதிகள் இந்தஇணைப்புக் குழுவில் அங்கம் வகிப்பதால் பல்வேறு கருத்துக்கள் முன் வைக்கப்படலாமே தவிர பொருத்தமான வேலைத்திட்டங்களை நிறைவேற்றுவது கடினமாக இருக்கும் என்று அவர் கூறினார். (இ-8-10)

## யாழ்.-திருமலை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காலியில் இருந்து வந்த இரு கப்பல்களிலும் தலா 150 பயணிகள் வீதம் ஏற்றலாம் எனவும் —

'தராகி' கப்பலில் 270 பயணிகள் ஏற்றலாம் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

தற்போது திருகோணமலையில் உள்ள பயணிகளையும், வவுனியாவில் இருந்து வரும் பயணிகளையும் யாழ்ப்பாணம் அனுப்பிய பின்னரே கொழும்பில் இருந்து யாழ் செல்ல வேண்டியவர்கள் பற்றி முடிவு செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டது (இ-3)

## கிரிக்கெட்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதிதியாகக் கலந்து கொள்வதாக விளையாட்டுத்துறை அமைச்சர் எஸ். பி. திஸநாயக்க கூறியிருந்தபோதிலும் அமைச்சர் இவ்விதம் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார் எனத் தெரிவிக்கத் தவறியதற்கான பொறுப்பை தாம் ஏற்றுக் கொள்வதாக அவர் தெரிவித்துள்ளார்.

அடுத்த ஆண்டு மார்ச் மாதம் புதிய தலைவருக்கான தேர்தல் நடக்கும் வரை உப — தலைவர்களான திலங்க சுமதிபாலவும், ஹரேந்திர லுனுவிலவும் அதன் தலைவராக இருப்பர். ( -3)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/8 இலக்கத்திலுள்ள அவர்களதுபணிமனையில் 13-09-1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org